# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 65 /2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 1 | நாள் | 30.08.2024 |
| பெயர் | நிவாஸ் | ஜாதி | |
| தந்தை பெயர் | தங்கதுரை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி Recall செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நாங்கள் புதிதாக கட்டியுள்ள மாடி வீட்டிற்கு இரண்டு பக்கங்களில் இரண்டு ஓட்டு வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல. ஒரு புறம் ஓட்டு வீடும் மற்றொரு புறம் காலி மனையும் உள்ளது. அந்த வீட்டிறக்கு பின்புறம் ஓட்டு வீடு உள்ளது என்றால் சரி. என்னுடைய பழைய ஓட்டு வீட்டை சுற்றிலும் முருகன், செல்வராஜ், ராமன், சுப்ரமணியன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் வீடு உள்ளது என்றால் சரி. புதிய மாடி வீட்டிற்கு எதிர்தாற்போல் AN செட்டியார் பண்ணை உள்ளது என்றால் சரி. ஜெயராமன், வசந்தா, பாண்டியன் ஆகியோரது வீடுகள் உள்ளது என்றால் சரி. மற்றொரு ஓட்டு வீட்டிற்கு பக்கத்தில் பாக்கியநாதன், குணசேகரன், கண்ணன், ரெங்கநதன், பழனி, சீனிவாசன் ஆகியோரது வீடு உள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே நான் சொன்ன ஓட்டு வீட்டிற்கு பக்கத்தில் அவர்களது வீடு உள்ளது. என்னுடைய மாடி வீட்டிற்கு கிழக்கு புறத்திலும் பின்புறத்திலும் மொத்த இரண்டு ஓட்டு வீடுகள் உள்ளது. அந்த ஓட்டு வீடுகள் எங்களக்கு சொந்தமானவை என்றால் சரி. புது மாடி வீட்டின் வாசப்படி அக்ரஹாரத்தெருவில் உள்ளது என்றால் சரி. சம்பவ சமயத்தில் புதிய மாடி வீட்டில் கட்டுமான பணிகள் நடந்து வந்தது என்றால் சரி. 1 வது எதிரி இறந்து போன என் அப்பா தங்கதுரையின்

சகோதரியின் கணவர் என்றால் சரி. 4 வது எதிரி வேல்முருகன் 1 வது எதிரியின் மருமகன் என்றால் சரி. 2 மற்றும் 3 எதிரிகள் 1 வது எதிரியின் மகன்கள் என்றால் சரி. சம்பவத்திற்கு முன்பு எதிரிகள் எங்கள் வீட்டில் வந்து சாப்பிடுவார்கள்என்றாலும் எங்களுக்குள் சுமூகமான உறவு இருந்தது என்றால் சரியல்ல. எங்களுக்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்றால் எனது சித்தப்பா நம்பியாரின் நிலத்தை நாங்கள் குத்தகைக்கு ஓட்டிவந்தோம். அவருக்கு கொடுக்க வேண்டியதை நாங்கள் கொடுத்தோம் அதன்பிறகு எதிரிகள்அந்த நிலத்தை ஓட்டினார்கள். எனக்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்றால் எனது சிறு வயது முதலே அவர்கள் வீட்டிற்கு போக மாட்டோம் பேச்சுவார்த்தை இல்லை. அவர்களது பழக்கவழக்கம் எங்களுக்கு பிடிக்கவில்லை. நான் பாட்டாளி மக்கள் கட்சியல் ஒன்றிய கழக செயலாளராக இருந்தேன் என்றால் சரி'. நான் எனது கட்சி விஷயமாக காவல் நிலையத்திற்கு போவேன் என்றால் சரி. என் மீதும் என் குடும்பத்தினர் மீதும் என் அப்பா இறப்பதற்கு முன்பு எந்த வழக்கும் இல்லை. செல்வராஜ் எனது சித்தப்பா என்றால் சரி. அவர் என்ஊரில் இருக்கிறார் என்றால் சரி. அவர் என் குடும்பத்தின் மீது வழக்கு கொடுத்து நிலுவையில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நம்பியார், லதா நிலத்தை நான் சாகுபடி செய்ததற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் வாய்தா கட்டியதற்கு ரசீதும் சிட்டா அடங்கல் மற்றும் நெல் அளந்ததற்கான ரசீதும் உள்ளது. இந்த வழக்கின் சாட்சி பட்டியலில் காட்டப்பட்டிருக்கும் ராஜாமணி மகன் ரமேஷ் எனக்கு என்ன உறவு என்றால் தூரத்து சொந்தம் மாமன் மகன் அத்தை மகன் என்று கூப்பிடுவோம். அந்த ரமேஷீக்கும் 1 வது எதிரிக்கும் விரோதம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி பட்டியலில் உள்ள 9 வது சாட்சி தங்கராசு மகன் ராமமூர்த்திக்கும் எனக்கு என்ன உறவு என்றால் அவர் எனது மாமனார். சாட்சி பட்டியலில் உள்ள 12 வது சாட்சி சுப்ரமணியன் என்பவரது வீடு முதல் எதிரியின் வீடு அமைந்துள்ள பிள்ளையார் கோவிலுக்கு பக்கத்தில் உள்ளது. சாட்சி ரமேஷ், ராமமூர்த்தி, சுப்ரமணியன் ஆகியோருக்கு என் தெருவில் வீடு இல்லை என்றால் சரியல்ல. ஒரே தெருவில் கொஞ்சம் தள்ளி உள்ளார்கள். வழக்கு சம்பவத்திற்கு முதல் நாள் நான் 1 வது எதிரியை அடித்து விட்டதாக என் மீது அவர் மணல்மேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரி. அந்த புகாரின் பேரில் என்மீது எதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் மறுநாள் என் அப்பாவை

கொன்று விட்டார்கள் அப்புறம் எப்படி நடவடிக்கை எடுப்பார்கள். எதிரிகள் நான்குபேரும் இரண்டு இருசக்கர வாகனத்தில் என் வீட்டிற்கு வந்தார்கள். அந்த சமயத்தில் நான் என் புது வீட்டின் வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரி. அந்த இடத்தில் வைத்து தான் எங்களையெல்லாம் காயப்படுத்தியதாக சொல்கிறேன் என்றால் சரி. சம்பவம் நடக்கும்போது எந்த ஓட்டு வீட்டில் என் அம்மா சின்ன ஆயா மற்றும் என் அண்ணி சுபா இருந்தார்கள் என்றால் மாடி விட்டிற்கு கிழக்கில் உள்ள ஓட்டு வீட்டில் இருந்தார்கள். என்னை யார் அடித்தபின் அவர்கள் அங்கு வந்தார்கள் என்றால் சத்தம் கேட்டவுடன் அங்கு வந்தார்கள். முதலில் என் அப்பாவைதான் எதிரிகள் அரிவாளால் வெட்டினார்கள். என் அப்பாவை வெட்டியதும் நான் சத்தம்போட்டேன் என்றாலும் அந்த சத்தம் கேட்டு என் அம்மாவும் அண்ணிகள் சுதா, அனுசுயா வந்தார்கள் என்றால் சரி. என் அப்பாவும் எதிரிகளும் மிகவும் பாசமாக இருந்தாகள் என்றாலும் அவர்களுக்குள் எந்த விரோமும் இல்லை என்றால் பொய். அப்படி பாசமாக இருந்தால் எப்படி என் அப்பாவை வெட்டுவார்கள். என் அப்பாவை முதலில் யார் எந்த பக்கம் தலையில் வெட்டினார்கள் என்றால் சரவணன் அரிவாளால் முதலில் தலையில் வெட்டினார். என் அப்பாவிற்கு எந்த பக்கம் நின்று சரவணன் வெட்டினான் என்றால் சரவணன் என் அப்பாவிற்கு பின்பக்கம் நின்றுதான் என் அப்பாவை தலையில் வெட்டினார். முதல் வெட்டு வெட்டி எவ்வளவு நேரம் கழித்து என் அப்பாவை இரண்டாவது வெட்டு வெட்டினார்கள் என்றால் அதே நேரத்தில் எங்களையும் இரண்டு பேர் பைப் வைத்துக்கொண்டு தாக்கியதால் நாங்கள் கீழே விழுந்து விட்டோம். என் அப்பாவும் கீழே விழுந்து விட்டார். என் அப்பாவை முதல் வெட்டு வெட்டி அடுத்த செகண்டே மறு வெட்டும் வெட்டினார். எங்களை அடித்து விட்டு அப்பாவை வெட்டி விட்டு எதிரிகள் ஓடி விட்டார்களா என்றால் ஆமாம். ஊர்காரர்கள் யாரும் எதிரிகளை துரத்தி பிடித்தார்களா என்றால் இல்லை. பெண்கள்தான் இருந்தார்கள். யாரும் துரத்தி பிடிக்கவில்லை. ராமமூர்த்தி, ஸ்டாலின், சுப்ரமணி ஆகியோர் என்னையும் என் அப்பாவையும் என் அண்ணன் கதிரவனையும் மயிலாடுதுறை GH ல் சேர்த்தார்கள். அந்த மூன்றுபேரும் சம்பவம்நடந்து ஒரு அரை மணிநேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தாரகள். அதன் பிறகு மருத்துவமனைக்கு அழைத்துபோனார்கள். சம்பவம் நடந்து ஒரு மணிநேரம் கழித்துதான் மருத்துவமனைக்கு வந்தோம். வண்டி கிடைக்காமல் தாமதமாகிவிட்டது. எதிரி சரவணன் நாங்கள் மயிலாடுதுறை மருத்துவமனைக்கு

வருவதற்ககு முன்பே அங்கு உள்நோயளியாக அட்மிட்டில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சரவணனை நான் அந்த மருத்தவனையில் பார்க்கவே இல்லையா என்றால் இல்லை. சரவணனுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் ஓட்டி வந்த கருப்புகலர் Passion pro வண்டி எப்படி உடைந்தது என்றால் என் அப்பாவை வெட்டியாதால் ஆத்திரத்தில் நாங்கள் தான் உடைத்தோம். வெட்டியபிறகு ஒரு வண்டியில் இரண்டு பேர் ஏறி தப்பித்து விட்டார்கள் இரண்டு பேர் நடந்து ஓடி விட்டார்கள். ஒரு கருப்புகலர் Passion pro வண்டியை அங்கேயே விட்டு விட்டு போய் விட்டார்கள். அதை தான் உடைத்து விட்டோம். எதிரிகள் எங்களை தாக்க பயன் படுத்திய ஆயுதங்களை எடுத்து கொண்டு போய் விட்டார்களா என்றால் இல்லை. அங்கேயேதான் கிடந்தது. எங்கள் வீட்டில் இருந்தவர்கள் எடுத்து வைத்து போலிசில் ஒப்படைத்தார்கள். நான் அப்போது மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். என்னை எதிரிகள் அடித்ததால் எனக்கு மயக்கம் வந்து கீழே விழுந்ததாக நாகப்பட்டினத்தில் என்னை விசாரிக்கும்போது சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். அடித்த பிறகு மயக்கம் வந்து கீழே விழுந்து அதன்பிறகு உடனே எழுந்து விட்டேன். டாக்டரிடமும் போலிசாரிடமும் நடந்த விவரத்தை நான் தான் சொன்னேன் என்றால் சரி. டாக்டரிடம் என்னை கம்பியால் அடித்ததாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. பைப்பால் அடித்ததாகதான் சொல்லியிருக்கிறேன். சம்பவம் நடந்த அன்று கட்டிட வேலை செய்யவில்லை. சம்பவத்தின் போது நான், என் அப்பா, அண்ணன் ஆகியோர் எதிரிகளை தாக்கவில்லையா என்றால் எங்களிடம் ஆயுதம் எதுவும் இல்லாததால் தாக்கவில்லை. எனத வீட்டை சுற்றி எனது உறவினர் வீடு உள்ளது என்றால் சரியல்ல. என் அண்ணன் வீடு உள்ளது மற்றவர்கள் என் ஊர்காரர்கள்தான். என் அப்பாவிற்கு சம்பவத்திற்கு முன்பு கிட்னி குறைபாடு இருந்ததா என்றால் எந்த குறைபாடும் இல்லை. சண்டை நடந்த உடனே நான் யாருக்கு முதலில் போன் செய்தேன் என்றால் 108 க்கு போன் செய்தேன். கிடைக்கவில்லை அதனால் என் நண்பர் மணல்மேடு ராஜா பிள்ளை என்பவருக்கு போன் செய்தேன். நான் காவல் நிலையத்திற்கு போன் செய்தேனா என்றால் மருத்துவமனைக்கு வரும் வழியில் முத்துக்கிருஷ்ணன் என்ற போலிசுக்கு போன் செய்து எங்களை விசாரணைக்கு வர சொல்லி இருந்தீர்கள் இப்படி பிரச்சனை ஆகிவிட்டது என்று தகவல் சொன்னேன். அதன்பிறகு போலிசார் மயிலாடுதுறை மருத்துவமனைக்கு

வந்தார்கள். போனில் யார் யார் என் அப்பாவை வெட்டினார்கள் என்ற விவரத்தை சொன்னேனா் என்றால் இல்லை பிரச்சனை ஆகிவிட்டது என்று சொன்னேன். மயிலாடுதுறை GH ல் தான் வாக்குமூலம் கொடுத்தேன். வெட்டிவிட்டார்கள் அப்பாவிற்கு காயம் ஏற்பட்டு விட்டது மயிலாடுதுறை GH க்கு போகிறோம் என்று போலிசாரிடம் போனில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் மயிலாடுதுறை GH க்கு போய் அரை மணிநேரம் கழித்துதான் போலிசார் அங்கு வந்தார்கள். அங்கு எழுத்துமூலமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார் வாக்குமூலம் தான் கொடுத்தேன். என் அண்ணன் எழுத்துமூலமான புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. என் அண்ணனுக்கு தலையிலும் வாயிலும் அடிப்பட்டிருந்ததால் அவர் புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை. போலிசாரிடம் எத்தனை கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. உள்ளூரில் உள்ள செல்வராஜ் சித்தப்பா, பிரகாஷ், விஜய், கலியமூர்த்தி மகன் கதிரவன் ஆகியோரைப்பற்றி போலிசாரிடம் எதுவும் சொன்னேனா என்றால் எதிரிகளை எங்கள் வீட்டிற்கு வரவைத்ததே அவர்கள்தான். இந்த விவரத்தை போலிசாரிடம் சொன்னேன். அது தான் உண்மையா என்றால் ஆமாம். செல்வராஜ் சித்தப்பா, பிரகாஷ், விஜய், கலியமூர்த்தி மகன் கதிரவன் ஆகியோருக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று போலிசாரிடம் எப்போதாவது சொன்னேனா என்றால் இல்லை. என் அண்ணன், என் அம்மா அப்படி சொன்னார்களா என்று எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு பிறகு எதிரிகள் அவர்களது நிலத்தில் சாகுபடி செய்யக்கூடாது என்று நான் மறைத்ததால் தரிசாக கிடந்ததா என்றால் ஆமாம். என் அப்பாவிற்கு தலையில் ஏற்பட்ட இரண்டு வெட்டுக்காயத்தில் ஒரு வெட்டுகாயத்திற்கு தையல் போடப்பட்டுள்ளது என்றாலும் அது எங்கு போடப்பட்டது என்றால் மயிலாடுதுறை GH ல்தான் போடப்பட்டது. என் அப்பாவிற்கு காயம் ஏற்பட்டபிறகு வேறு எந்த மருத்துவமனையிலும் சிகிச்சை அளிக்கிவில்லையா என்றால் இல்லை. மயிலாடுதுறை GH க்கு தான் கொண்டு வந்தோம். சம்பவத்தின்போது என் அம்மாவிற்கோ என் அண்ணிக்கோ அடி பட்டதா என்றால் என் அம்மாவிற்கும் அண்ணி அனுசுயாவிற்கும் அடிபட்டதாக சொன்னார்கள் நான் பார்க்கவில்லை. புதிய மாடி வீட்டு வாசலில்தான் சண்டை நடந்தது என்றால் மேற்கு பக்கத்தில் உள்ள காலி மனையில்தான் சண்டை நடந்தது. உண்மையில் சம்பவம் நடக்காததால் தான் மாடி வீட்டு வாசலில் சம்பவம் நடந்ததாகவும் பக்கத்தில்உள்ள காலி மனையில் சம்பவம் நடந்ததாக மாற்றி மாற்றி

சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1 வது எதிரிக்கும் மட்டும் தான் முதல் நாள் நடந்த பிரச்சனையால் மனக்கசப்பு என்றாலும் எனது குடும்பத்தினருக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் மனக்கசப்பு இல்லை என்றாலும் சரியல்ல. முதல் நாள் நடந்த பிரச்சனை குறித்து கேட்டவந்த சரவணனை வயலில் வைத்து நானும் எனது சகோதரர் கதிரவனும் தாக்கினோம் என்றாலும் அதை என் தந்தையிடம் முதல் எதிரி சொன்னதன்பேரில் எனது தந்தை எங்களை கேட்டார் என்றாலும் அதனடிப்படையில் என் சகோதரருக்கும் என் தந்தைக்கும் ஏற்பட்ட சண்டையில் என் அப்பாவிற்கு காயம் ஏற்பட்டது என்றால் பொய். எங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரிகளால் ஏற்படவில்லை என்றால் பொய். எனது தந்தை மீது 1 வது எதிரி மற்றும் சரவணன் மிகுந்த பாசம் உள்ளவர்களாக இருந்தார்கள் என்றால் பொய். எதிரிகள் எந்த அப்பாவை தாக்குவதற்கான எந்த விதமான தேவையும் மனக்கசப்பும் முகாந்திரமும் ஏற்பாடும் இல்லை என்றாலும் என் தந்தையை அவர்கள் தாக்கவில்லை என்றால் பொய். அவர்கள் தாக்கியது உண்மை. எங்கள் இடத்தில் எதிரிகள் எங்களை வந்து தாக்கியதாக சொல்வது நம்பக்கூடியதாக இல்லை என்றால் தவறு. நம்பியார் - லதா மற்றும் எதிரிகளின் நிலத்தை எனக்கு தர சொல்லி அவர்கள் மறுத்ததால் அவர்கள் மீது பொய் வழக்குபோடப்பட்டுள்ளது என்றால் தவறு. அப்படியென்றால் என் அப்பா இறந்தது பொய்யா. போலிசார் என்னை மயிலாடுதுறை GH ல் விசாரித்தபிறகு வேறு எங்காவது விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் மயிலாடுதுறை GH ல் 11 உள்நோயாளியாக அட்மிட்டில் இருந்தேன். நான் இப்போது நீதி மன்றத்தில் சொன்னதுபோல்தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரி. எதிரிகளால் எங்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றால் பொய்.